RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 117 | மே.4, 2025 ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## ஜூன் 1ல் மதுரையில் திமுக பொதுக்குழு கூட்டம்: மா.செ. கூட்டத்தில் 4 தீர்மானங்கள் நிறைவேற்றம்

சென்னை: மே.4-

"ஜூன் 1ல் மதுரையில் பொதுக்குழு கூட்டம் நடத்தப்படும், அமலாக்கத் துறை போன்ற அமைப்புகளை அரசியல் பழிவாங்கலுக்குப் பயன்படுத்தும் ஒன்றிய பாஜக அரசின் அதிகார அத்துமீறலை மக்கள் மன்றத்திலும் சட்டத்தின் துணைக் கொண்டும் திமுக எதிர்கொள்ளும்" உள்ளிட்ட 4 தீர்மானங்கள் திமுக மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.




தேர்தல் மற்றும் கட்சிப் பணிகள் குறித்து ஆலோசிப்பதற்காக அண்ணா அறிவாலயத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் திமுக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், ஜம்மு காஷ்மீர் மாநிலம் பஹல்காமில் நிகழ்த்தப்பட்ட தீவிரவாதத் தாக்குதலில் உயிரிழந்த அப்பாவி பொதுமக்களுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது. அதேபோல், முற்போக்கான சிந்தனைகளுடன் கடமையாற்றிய கத்தோலிக்கத் திருச்சபைத் தலைவர் போப் பிரான்சிஸ் மறைவுக்கும் இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து 4 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவற்றின் விவரம் வருமாறு:

தீர்மானம்: 1 முதல்வருக்கு பாராட்டு தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி ஒன்றிய பா.ஜ.க. அரசிடம் தொடர்ந்து குரல் எழுப்பி சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்த வேண்டிய பொறுப்பு ஒன்றிய அரசுக்குத்தான் உள்ளது என்பதை நாட்டு மக்களுக்கும் ஒன்றிய அரசுக்கும் உணர்த்தி தற்போது சாதிவாரிக் கணக்கெடுப்பு அறிவிப்பை பெற்றிருக்கிறார்.

அதுமட்டுமல்ல, அரசியல் சட்ட வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயமாக ஆளுநரின் கையெழுத்தின்றி உச்ச நீதிமன்றமே ஒப்புதல் அளித்துச் சட்டமியற்றும் அதிகாரத்தைத் தனது சட்டப் போராட்டம் மூலம் பெற்று, ஆளுநர் அடாவடியாக நிறைவேற்ற மறுத்த பத்து மசோதாக்களைச் சட்டமாக்கி சகாப்தம் படைத்து, "சட்டமியற்றும் அதிகாரம் சட்டமன்றத்திற்கே" "மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கே நிச்சயமாக ஆளுநருக்கு இல்லை" என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க உச்ச நீதிமன்றத் தீர்ப்பைப் பெற்றுள்ளார்.

தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்டியது மட்டுமின்றி, இந்தத் தீர்ப்பின் மூலம், இந்தியக் கூட்டாட்சி வரலாற்றில் அனைத்து மாநிலங்களுக்குமான உரிமைகளைப் பெற்றுத் தந்திருக்கிறார்.

மேலும், ஐந்தாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் முதலமைச்சர் துணையாகச் செயலாற்றி வரும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும் இம்மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம் வாழ்த்தும் பாராட்டும் நன்றியும் தெரிவித்துக் கொள்கிறது.

தீர்மானம்: 2 சாதனை விளக்கப் பொதுக்கூட்டங்கள் முதலமைச்சர், நடைபெற்று முடிந்த சட்டமன்றக் கூட்டத்தொடரில், அவரது உள்துறை மானியக் கோரிக்கை மீதான பதிலுரையில் தெரிவித்தபடி, வளர்ச்சி சார்ந்த எந்த ஓர் இலக்காக இருந்தாலும் அதில் இந்திய ஒன்றியத்தின் சராசரியைவிட தமிழ்நாடு கூடுதலான அளவில் முன்னேறியிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழக அரசின் சாதனைகளைப் பகுதி, ஒன்றிய, நகர அளவில், இளைஞர் அணியின் மூலம் வரப்பெற்ற 186 இளம் பேச்சாளர்கள் உள்ளிட்ட 443 பேச்சாளர்களின் பங்கேற்புடன், 868 ஒன்றியங்கள் 224 பகுதிகள் 152 நகரங்கள் என மொத்தம் 1,244 இடங்களில் "நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு!" சாதனை விளக்கப் பொதுக்கூட்டங்களை நடத்திடுவதென மாவட்டக் கழகச் செயலாளர்களின் இந்தக் கூட்டம் முடிவு செய்கிறது.

தீர்மானம்: 3 கூடல் மாநகரில் ஜூன் 1ல் பொதுக்குழு கூட்டம்: நூறாண்டு கடந்த திராவிட இயக்கத்தில், 75 ஆண்டுகளைக் கடந்து தமிழ் மக்களுக்கான சமுதாய அரசியல் பணிகளைச் சளைக்காமல் மேற்கொண்டு, நாட்டின் அரசியலில் தவிர்க்க முடியாத தேசிய சக்தியாகத் திராவிட முன்னேற்றக் கழகம் திகழ்கிறது.

பல்வேறு வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானங்களை நிறைவேற்றி தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்காகவும், நம் நாட்டின் ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்காகவும், சமத்துவம், சமூகநீதி, சிறுபான்மையினர் நலன் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரின் நலன் காக்கும் மாபெரும் இயக்கமாக முன்வரிசையில் நிற்கும் திமுகவின் பொதுக்குழுக் கூட்டம் வருகின்ற ஜூன் 1ஆம் நாள் கூடல் மாநகராம் மதுரையில் நடைபெறும் என்று இம்மாவட்டச் கழக செயலாளர்களின் இந்தக் கூட்டம் தீர்மானிக்கிறது.

தீர்மானம்: 4 பாஜகவின் பழிவாங்கும் அரசியலை சட்டத்தின் துணை கொண்டு எதிர்கொள்ளும்: நீதித்துறை உள்ளிட்ட அனைத்துத் தன்னாட்சி அமைப்புகளின் செயல்பாடுகளிலும் அத்துமீறிக் குறுக்கிட்டு அந்த அமைப்புகளின் சுதந்திரத்தைப் பறித்து வருவதோடு திமுக உள்ளிட்ட எதிர்க்கட்சி ஆளும் மாநிலங்கள் மட்டுமே வருமான வரித் துறை, அமலாக்கத் துறை ஆகியவற்றின் ரெய்டுக்கும், சோதனைகளுக்கும் இலக்காகும் வகையில் அதிகார அத்துமீறல் செய்து அறிவிக்கப்படாத நெருக்கடி நிலைமையை உருவாக்கி வரும் ஒன்றிய பாஜக அரசுக்கு இந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம் கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

சிபிஐ., அமலாக்கத் துறை, வருமான வரித் துறை போன்ற நடுநிலை தவறாது செயல்பட வேண்டிய அமைப்புகளை எதிர்க்கட்சிகளுக்கு எதிரான அரசியல் பழிவாங்கல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தியுள்ளதன் விளைவாக இன்று உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றத்தின் கண்டனத்திற்கு இந்த அமைப்புகளை ஆளாக்கி, அதிமுக போன்ற கட்சிகளை மிரட்டி கூட்டணிக்கு அமைக்க ஒன்றிய பாஜக அரசு இந்த அமைப்புகளை ஈடுபடுத்தி வருகிறது.

தமிழ்நாட்டில் ஒரு அமலாக்கத் துறை அதிகாரி லஞ்சம் பெறும் போது கைது செய்யப்பட்ட நடவடிக்கையை "பழிவாங்கும் நடவடிக்கை" எனக் கூறிய அமலாக்கத் துறையைப் பார்த்து; இப்போது டெல்லி உயர் நீதிமன்றமும், மாண்பமை உச்ச நீதிமன்றமும் அந்த அமைப்புகளில் நடக்கும் ஊழல்களை கண்டித்துக் கொண்டு இருப்பதையும் மாவட்டக் கழகச் செயலாளர்களின் இந்தக் கூட்டம் பதிவு செய்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்தினர் மீது பழிவாங்கும் நடவடிக்கைக்காக அமலாக்கத் துறை போன்ற அமைப்புகளை ஒன்றிய பா.ஜக அரசு பயன்படுத்துவதை திராவிட முன்னேற்றக் கழகம் சட்டத்தின் துணைக் கொண்டு துணிச்சலுடன் எதிர்கொண்டு, ஏற்கெனவே முதல்வர் சொன்னபடி, அமித்ஷா அல்ல; எந்த ஷா வந்தாலும் அவர்கள் எத்தனை பரிவாரங்களைச் சேர்த்துக் கொண்டு வந்தாலும் அதனை எதிர்த்து, நீதியை நிலைநாட்டிடவும் மக்கள் மன்றத்தில் ஒன்றிய பாஜ. அரசின் அதிகார அத்துமீறலை எடுத்துரைத்திடவும் இந்தக் கூட்டம் தீர்மானிக்கிறது.

இவ்வாறாக 4 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

## புதுச்சேரியில் மே 20ல் பந்த்: ஏஐடியூசி தலைமையில் நடந்த கூட்டத்தில் முடிவு

புதுச்சேரி: மே.4-

புதுச்சேரியில் இம்மாதம் 20ம் தேதி முழு அடைப்பு போராட்டம் நடத்துவது என ஏஐடியூசி தலைமையிலான கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

தொழிலாளர்கள் சார்பாக தனித்தும், கூட்டாகவும் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகளை மத்திய அரசு புறக்கணித்துள்ளதோடு, கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு ஆதரவாக தொழிலாளர் விரோத நடவடிக்கைகள், சட்டத் திருத்தங்கள் மேற்கொள்வது பற்றி தேசிய பேரவை விவாதித்தது. இதையடுத்து நாடு தழுவிய அளவில் வரும் 20ம் தேதி பொது வேலை நிறுத்தத்துக்கு மத்திய தொழிற்சங்கங்கள் அழைப்பு விடுத்துள்ளது.

இந்தப் போராட்டத்தை புதுச்சேரியில் நடத்துவது சம்பந்தமான ஆலோசனை கூட்டம் முதலியார்பேட்டை ஏஐடியூசி அலுவலகத்தில் இன்று நடைபெற்றது. இக்கூட்டத்துக்கு ஏஐடியூசி மாநில பொதுச் செயலாளர் சேதுசெல்வம் தலைமை தாங்கினார். மாநில கவுரவத் தலைவர் அபிஷேகம், மாநிலத் தலைவர் தினேஷ் பொன்னையா, சிஐடியு மாநில செயலாளர் சீனுவாசன், மாநிலத் தலைவர் பிரபுராஜ், ஐஎன்டியூசி மாநில பொதுச் செயலாளர் ஞானசேகரன் உள்ளிட்ட பல்வேறு தொழிற்சங்கத்தினர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில், வேலை நிறுத்த பந்த் போராட்டத்தை விளக்கி கோரிக்கை விளக்க கருத்தரங்கம் வரும் 6ம் தேதி மாலை சுதேசி மில் அருகில் நடத்துவது எனவும், மே 15, 16, 17 ஆகிய மூன்று தினங்கள் வேன் பிரச்சாரம் செய்வது எனவும், மே 20ம் தேதி பந்த், மறியல் போராட்டம் ராஜா தியேட்டர், சேதராப்பட்டு, மதகடிப்பட்டு, திருக்கனூர், வில்லியனூர், அரியாங்குப்பம், பாகூர், காரைக்கால் ஆகிய மையங்களில் நடத்துவது எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

புதிய தொழிலாளர் சட்டங்களை திரும்ப பெற வேண்டும். அமைப்புசாரா தொழிலாளர், ஒப்பந்த தொழிலாளர், திட்டம் சார்ந்த தொழிலாளர் உட்பட அனைவருக்கும் குறைந்தபட்ச ஊதியம் ரூ.26 ஆயிரம் மாதம் ஒன்றுக்கு நிர்ணயம் செய்ய வேண்டும். ஒப்பந்த, தினக்கூலி, வெளிச்சந்தை முறை, பயிற்சியாளர் போன்ற பெயர்களில் நடக்கும் சுரண்டலுக்கு முடிவு கட்ட வேண்டும். ஒப்பந்த தொழிலாளர்களுக்கு சம வேலைக்கு சம ஊதியம் வழங்கிட வேண்டும். அமைப்புசாரா தொழிலாளர் உட்பட அனைத்து தொழிலாளர்களுக்கும் குறைந்தபட்ச ஓய்வூதியம் ரூ. 9 ஆயிரம் மற்றும் சமூக பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என வலியுறுத்தி இந்தப் போராட்டம் நடத்தப்பட உள்ளது.

## இந்தியாவில் ஆயத்த ஆடைகள் தயாரிப்பில் தமிழ்நாடு முதலிடத்தைப் பிடித்து சாதனை

டெல்லி, மே.4-

இந்தியாவில் ஆயத்த ஆடைகள் தயாரிப்பில் தமிழ்நாடு முதலிடத்தைப் பிடித்து சாதனை படைத்துள்ளது. குறிப்பாக திருப்பூர் நகரம் ஆயத்த ஆடை உற்பத்தியில் இந்தியாவின் முதன்மை நகரமாக விளங்குகிறது. மேலும், ஜவுளித் தொழில் ஏற்றுமதியிலும் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. இந்திய ஆயத்த ஆடைத் துறையில் தமிழ்நாட்டின் பங்களிப்பு.

* நாட்டில் ஆயத்த ஆடை தயாரிப்பில் ஈடுபட்டுள்ள மொத்த தொழிலாளர்களில் 19.1% பேர் தமிழ்நாட்டில் உள்ளனர்.

* ஆயத்த ஆடை தயாரிப்பில் உள்ள தொழிலாளர்களில் அதிக ஊதியம் பெறுவதும் தமிழ்நாட்டில் உள்ள தொழிலாளர்களே.

*மாநிலத்தில் உள்ள தொழிலாளர்களில் 49.8% பேர் திருப்பூரில் பணியாற்றுகின்றனர்.

*ஆடை தயாரிப்பில் ஈடுபட்டுள்ள 19 லட்சம் தொழிலாளர்களில் 3.61 லட்சம் தொழிலாளர்கள் தமிழ்நாட்டில் பணிபுரிகின்றனர்.

*திருப்பூரில் மட்டுமே 1.8லட்சம் தொழிலாளர்கள் ஆயத்த ஆடை தயாரிப்பு தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

*தமிழ்நாட்டில் ஆயத்த ஆடை தயாரிப்பு தொழிலாளர்களில் 50% பேர் ஈரோடு, திருவள்ளூர், கோவையில் உள்ளனர்.

## அண்ணாமலை மாற்றத்தால் அப்செட் ஆன கோவை தொழில் துறையினர்!

சென்னை, மே.4-

2024 மக்களவைத் தேர்தலில் பாஜக தரப்பில் வெற்றி வேட்பாளராக பார்க்கப்பட்டவர் கோவை மக்களவைத் தொகுதியில் போட்டியிட்ட அண்ணாமலை. எப்படியும் ஜெயித்தாக வேண்டும் என்பதற்காக, கிடைத்த வாய்ப்புகளை எல்லாம் சரியாகப் பயன்படுத்திய அண்ணாமலை, கோவை தொழில்துறையினருக்கும் வாக்குறுதிகளை ஏராளமாக வாரி வழங்கி இருந்தார்.

மத்திய அரசில் செல்வாக்கான நபராக இருப்பதால் இவர் வெற்றிபெற்றால் நமக்கான பிரச்சினைகள் தீரும் என்ற நம்பிக்கையில், கோவை தொழிலதிபர்கள் சிலர், மாநிலத்தை ஆளும் திமுகவின் பொல்லாப்பு வருமே என்றெல்லாம் கவலைப்படாமல் அண்ணாமலைக்கு ஆதரவாக நின்றார்கள். சிலர் ஆளும் கட்சியின் நெருக்கடிகளையும் சமாளித்து அண்ணாமலைக்காக வாக்குச் சேகரித்தார்கள்; பலர் நிதியுதவியும் தந்தார்கள். ஆனாலும், தேர்தல் முடிவுகள் இவர்களின் எதிர்பார்ப்புக்கு நேர்மாறாக அமைந்து போனது.

காலை உணவு திட்டம், பெண்களுக்கு இலவச பேருந்துப் பயணம், மகளிர் உரிமைத் தொகை உள்ளிட்ட திமுக அரசின் சாதனை திட்டங்களை எல்லாம் பின்னுக்குத் தள்ளிவிட்டு அண்ணாமலை என்ற மனிதருக்காக கோவை மக்கள் சுமார் நாலரை லட்சம் வாக்குகளை வாரி



வழங்கினார்கள். அதிமுக கூட்டணி இருந்திருந்தால் அண்ணாமலை ஜெயித்தே இருப்பார். கோவை மாவட்ட வளர்ச்சிக்கு அண்ணாமலை அளித்திருந்த வாக்குறுதிகள் அப்படி. அதை நம்பித்தான் தொழில்துறையினரும் அவருக்கு ஆதரவாக களத்தில் நின்றார்கள்.

தேர்தலில் தோற்றாலும் தனது செல்வாக்கை தக்கவைக்க அண்ணாமலை கோவையின் வளர்ச்சித் திட்டங்களுக்காக மத்திய அரசிடம் பேசுவார் என்ற அடுத்தகட்ட நம்பிக்கையும் கோவை மக்களுக்கு இருந்தது. ஆனால், அவர்கள் எதிர்பார்த்த எதுவுமே நடக்கவில்லை. போதாதுக்கு, அண்ணாமலை பாஜக தலைவர் பதவியிலிருந்தும் தூக்கப்பட்டிருப்பதால் மேற்கொண்டும் துவண்டு கிடக்கிறார்கள் கோவை மக்கள்.

தேர்தலில் தோற்றாலும், "கோவையின் தொழில் வளர்ச்சி, விமான நிலைய விரிவாக்கம் போன்ற நடவடிக்கைகளுக்கு மத்திய அரசிடம் தேவையான உதவிகளை நிச்சயம் கேட்டுப் பெற்றுத் தருவேன்" என உறுதியளித்தார் அண்ணாமலை. ஆனால், "அண்ணாமலை சொன்னதெல்லாம் வெறும் வாக்குறுதியாகவே இருக்கிறது; எதுவுமே வேலைக்கு ஆகவில்லை" என்று ஆதங்கத்தைக் கொட்டுகிறார்கள் அவருக்கு பின்னால் நின்ற கோவை தொழில்துறையினர்.

அதிமுகவுக்கு எதிரான கருத்துகளை அண்ணாமலை பேசிய விதம் அந்தக் கட்சியை நேசிக்கும் பெரும்பகுதி கோவை மக்களை அண்ணாமலை மீது அதிருப்தி கொள்ளச் செய்தது. இருந்தாலும் திமுகவுக்கு தக்க பதிலடி கொடுக்கிறார் என்பதற்காக அவரைத் தூக்கிப் பிடித்தார்கள். பஞ்சு மீதான 11 சதவீத இறக்குமதி வரியை ரத்து செய்தல், பாலியஸ்டர், விஸ்கோஸ் உள்ளிட்ட செயற்கை இழைகள் மீதான இறக்குமதி வரியை ரத்து செய்தல், ஜிஎஸ்டி பிரச்சினைகளை சரிசெய்தல், கோவை விமான நிலைய விரிவாக்கப் பணிகளை விரைவுபடுத்துதல், துபாய், கோலாலம்பூர் உள்ளிட்ட நாடுகளுக்கு கோவையிலிருந்து விமான சேவைகளைத் தொடங்குதல் இதெல்லாம் அண்ணாமலை கோவை மக்களுக்கு அளித்த வாக்குறுதிகள்.

இவை எதுவுமே செயல்வடிவத்துக்கு வரவில்லை என்பதுதான் கோவை தொழில்துறையினருக்கு அண்ணாமலை மீதிருக்கும் ஆதங்கம்.

முற்றாக நம்பிக்கை இழந்துவிட்டாலும், "அண்ணாமலைக்கு தேசிய அளவில் முக்கியத்துவம் அளிக்கப்படும்" என உள்துறை அமைச்சர் அமித் ஷா சொல்லி இருப்பதை நம்பி, இன்னமும் கோவை தொழில் துறையினர் சிலர், 'அண்ணாமலையால் அது முடியும்' என்ற நம்பிக்கையில் காத்திருக்கிறார்கள். அந்த நம்பிக்கையை அண்ணாமலை இனியாவது காப்பாற்றுகிறாரா என்று பார்க்கலாம்!

## "4 ஆண்டு கால திமுக ஆட்சியில் வீட்டில் கூட பாதுகாப்பாக வாழ முடியாத கொடுஞ்சூழல்" சீமான் விமர்சனம்

சென்னை: மே.4-

நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வெளியிட்டுள்ள அறிக்கையில், "ஈரோடு மாவட்டம், சிவகிரி அருகேயுள்ள விளக்கேத்தி, வெளாங்காட்டு வலசு பகுதியைச் சேர்ந்த மேகரையான் தோட்டத்தில் தனியாக வசித்து வந்த வயது முதிர்ந்த தம்பதிகளான ராமசாமி பாக்கியம்மாள் இருவரும் நகைக் கொள்ளையர்களால் வெட்டி படுகொலை செய்யப்பட்டிருப்பது பெரும் அதிர்ச்சியையும், மிகுந்த மனவேதனையையும் அளிக்கிறது. நான்காண்டு கால திமுக ஆட்சியில் வெளியில் மட்டுமல்ல வீட்டிற்குள்ளும் பாதுகாப்பாக வாழ முடியாத கொடுஞ் சூழல் நிலவுவது வன்மையான கண்டனத்திற்குரியது. பள்ளிக்கூடம் முதல் பல்கலைக்கழகம் வரை பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை. வழக்கறிஞர்கள் நீதிமன்ற வளாகத்திலேயே படுகொலை செய்யப்படுகின்றனர். மருத்துவர்கள் மீது மருத்துவமனை வளாகத்திலேயே கொலைவெறித் தாக்குதல்கள் நடத்தப்படுகிறது.

வளக் கொள்ளைகளுக்கு எதிராகப் போராடும் சமூக ஆர்வலர்கள் நட்டநடு சாலையில் வைத்து வெட்டி சாய்க்கப்படுகின்றனர். உயிருக்கு ஆபத்து உள்ளது என்று காவல்துறையில் புகாரளித்தாலும் கொல்லப்படும் வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை என்பதுதான் வழக்கமாக உள்ளது. தனிப்பட்ட கொலை, முன்விரோத கொலை, குடும்பக் கொலை, குடிபோதை கொலை, எங்கோ ஓரிடத்தில் கொலை என்று படுகொலைகளை வகை பிரித்து பாகுபடுத்தி, சட்டம் ஒழுங்கு சீரழிவை நியாயப்படுத்தும் முதல்வர் ஸ்டாலின் கூறிய எந்த கொம்பனும் குறை சொல்ல முடியாத ஆட்சி இதுதானா?

குடும்பங்களாகக் குறிவைத்து கொலைகள் நடைபெறுகிறது. ஒரே பகுதியில் அடுத்தடுத்து பலமுறை கொலைகள் நடைபெறுகிறது. ஆனாலும் கொலைகளைத் தடுக்க முடியவில்லை, கொலையாளிகளைப் பிடிக்க முடியவில்லை என்றால் தமிழகத்தில் காவல்துறை என்று ஒன்று உண்மையில் செயல்படுகிறதா? தமிழகத்தில் சட்டத்தின் ஆட்சிதான் நடக்கிறதா? இவையும் திராவிட மாடலின் சாதனைகளில் வருகிறதா என்ற அடுக்கடுக்கான கேள்வி எழுகிறது.

ஆகவே, திமுக அரசு மீதமுள்ள ஓராண்டுக்காவது சட்டம் ஒழுங்கைச் சீர்படுத்தி மக்களைப் பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், இனியும் இதுபோன்ற கொடூர படுகொலைகள் தொடரா வண்ணம் தடுக்க வேண்டுமெனவும் வலியுறுத்துகிறேன்." என்று அவர் கூறியுள்ளார்.



# தாம்பரம் மாநகர 49வது வட்ட திமுக சார்பில் தண்ணீர் பந்தல் திறப்பு விழா

தாம்பரம். மே.04-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட 49-வது வட்ட திமுக சார்பில் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா அவர்களின் அறிவித்தலின்படி பகுதி சிறுபான்மை துணை அமைப்பாளர் கே.விக்டர் சார்லஸ் மற்றும் 49வது வட்ட துணைச் செயலாளர் இ.குமார் ஆகியோர் ஏற்பாட்டில் தண்ணீர் பந்தல் திறப்பு விழா நடைபெற்றது

இதில் சிறப்பு அழைப்பாளராக பகுதி கழகச் செயலாளர் 4வது மண்டல குழு தலைவருமான டி.காமராஜ் கலந்துகொண்டு பொது மக்களுக்கு மோர் தர்பூசணி ரோஸ் மில்க் உள்ளிட்ட குளிர்பானங்கள் வழங்கினார் இதில் வட்ட பிரதிநிதி ஆர்.சீனா, எம்.ரமேஷ், எம்.லட்சுமி, ஏ.சதீஷ் குமார், வி.குருமணி, டி.அரவிந்த், எம்.ரவிகுமார், ப.விஜய், ஜேம்ஸ் ஜெயராஜ், மீசை சேகர், எம்.கோபி மற்றும் 49வது வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் மகளிர் அணி நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்





# திருமுருகன்பூண்டி கோவில் வளாகத்தில் சுகாதாரப் பணி மாவட்ட சுகாதார அலுவலரின் திடீர் ஆய்வு

திருப்பூர், மே.04-

திருப்பூர் மாவட்டம் அவிநாசி வட்டம் திருமுருகன்பூண்டி நகராட்சிக்கு உட்பட்ட அருள்மிகு திருமுருகநாதர் சுவாமி திருக்கோவில் வளாகத்தை சுற்றி குப்பைகளை அகற்றுமாறு மாவட்ட சுகாதார அலுவலர் உதவி இயக்குனர் ஜெயந்தி அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் ,அவிநாசி வட்டார மருத்துவ அலுவலர் மேற்பார்வையில், பூண்டி நகராட்சி அலுவலரின் கட்டுப்பாட்டில் இருக்கும் சுகாதாரப் பணியாளர்களைக் கொண்டு, இத்திருக்கோவில் வளாகத்தைச் சுற்றி உள்ள குப்பைகளை அகற்றி தூய்மைப்பணி மேற்கொள்ளப்பட்டது.

# பொதுமக்கள் இயற்கை பேரிடரை முன்கூட்டியே அறிந்து கொள்ள உதவும் தமிழ்நாடு அரசின் Sachet மற்றும் TN-Alert App-ஐ பதிவிறக்கம் செய்து பயனடையலாம்

## மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி தகவல்

சேலம், மே.04-

பொதுமக்கள் இயற்கை பேரிடரை முன்கூட்டியே அறிந்து கொள்ள உதவும் தமிழ்நாடு அரசின் Sachet மற்றும் TN-Alert Appஐ பதிவிறக்கம் செய்து பயனடையலாம். இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, தெரிவித்ததாவது:

இயற்கை பேரிடரை எதிர்கொ ள்ளவும், முன்னெச்சரிக்கை செய்திகளை உடனுக்குடன் பெறவும் தமிழ்நாடு அரசு, Sachet மற்றும் TN-Alert App-ஐ உருவாக்கியுள்ளது. இதனை Play Store-™ இருந்து பொதுமக்கள் அனைவரும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இதில் வானிலை தொடர்பான பல்வேறு அறிவிப்புகள் துல்லியமாக வழங்கப்பட்டு வருகிறது. குறிப்பாக தற்போதைய வானிலை தகவல், வானிலை முன்னறிவிப்பு, முன்னெச்சரிக்கை செய்திகளை முன்கூட்டியே எளிதாக தெரிந்து கொள்ளலாம்.

மேலும், மழை, இடியுடன் கூடிய மழை எச்சரிக்கை, மின்னல் எச்சரிக்கை, ஒவ்வொரு மணி நேரத்திற்குமான வானிலை அறிக்கை, அடுத்த 3 மணி நேரத்திற்கான வானிலை அறிவிப்பு, பெறப்பட்ட மழையின் அளவு, அணைகளின் நீர்மட்டம், வெள்ளம் ஏற்படும் போது செய்ய வேண்டியவை மற்றும் செய்யக் கூடாதவை மற்றும் பாதிக்கப்படக்கூடும் எனக் கருதப்படுகின்ற வசிப்பிடப் பகுதிகள் குறித்த விபரங்கள், பொதுமக்களின் பாதுகாப்புக்கான தகவல்கள் மேலும் பொது மக்கள் பேரிடர் தொடர்பான தங்களது புகார்களை பதிவு செய்வதற்கான வசதிகள் உள்ளன.

எனவே சேலம் மாவட்டத்தில் உள்ள பொதுமக்கள் அனைவரும் இயற்கை பேரிடரை முன்கூட்டியே அறிந்து கொள்ள உதவும், தமிழ்நாடு அரசின் Sachet மற்றும் TN-Alert Appஐ பதிவிறக்கம் செய்து பயனடையலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.இரா.பிருந்தாதேவி, தெரிவித்துள்ளார்.

# கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் செய்திக்குறிப்பு

கன்னியாகுமரி, மே.04-

ஆறு முதல் பதினாறு வயதுக்கு உட்பட்ட பள்ளிக் கல்வி பயிலும் மாணாக்கர்களுக்கு கலைப்பயிற்சிகள் வழங்குதல், அவர்களின் கலைத்திறமைகளை வெளிக்கொணர்தல், கலைக்கல்வி வழங்குதல் ஆகியவற்றை முக்கிய நோக்கமாகக் கொண்டு தமிழ்நாடு முழுவதும் ஜவகர் சிறுவர் மன்றங்கள் செயல்பட்டு வருகின் றன. திருநெ ல்வேலி மண்டலத்தின் கீழ் செயல்படும் கன்னியாகுமரி மாவட்ட ஜவகர் சிறுவர் மன்றத்தில் குரலிசை, பரதநாட்டியம், சிலம்பம் மற்றும் ஓவியம் ஆகிய கலைகளில் 6 வயது முதல் 16 வயது வரை உள்ள மாணவர்களுக்கு வாரந்தோறும் சனி மற்றும் ஞாயிறு கிழமைகளில் காலை 10.00 மணி முதல் 12.00 மணி வரை பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. தற்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர் கோவில், எஸ்.எல்,பி. அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளியிலும், பேச்சிப்பாறை அரசு மேல்நிலைப் பள்ளியிலும் செயல்பட்டு வருகின்றது. மேலும், விவரங்களுக்கு நாகர்கோவில் 75981 01177, பேச்சிப்பாறை 9487375588 என்ற அலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

மாணவர்கள் கோடை விடுமுறையை பயனுள்ளதாக, கழிக்கும் வகையில் மாணவர்களின் கலைத்திறனை வளர்க்கும் விதமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர் கோவில், எஸ்.எல்,பி. அரசு பெண்கள் உயர் நிலைப்பள்ளியில் குரலிசை, பரதநாட்டியம், சிலம்பம் மற்றும் ஓவியம் ஆகிய கலைகளும், பேச்சிப்பாறை அரசு மேல்நிலைப் பள்ளியில் குரலிசை, பரதநாட்டியம், களரி மற்றும் ஓவியம் ஆகிய கலைகளும் வருகின்ற 05-05-2025 முதல் 24-05-2025 வரை காலை 10.00 மணி முதல் 12.00 மணி வரை பயிற்சி அளிக்கப்படவுள்ளது. பயிற்சி முடிந்தவுடன் நிறைவு நாள் அன்று பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு பயிற்சி சான்றிதழ்கள் வழங்கப்படும். இவ்வாய்ப்பினை மாணவர்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர். அழகுமீனா, கேட்டுக்கொள்கிறார்கள்.

# தாம்பரம் மாநகர தி.மு.க. தொழிலாளர் அணி சார்பில் தொழிலாளர் தினத்தை முன்னிட்டு சிட்லபாக்கம் இரா.விஜயகுமார் தலைமையில் நடைபெற்றது



தாம்பரம், மே.04-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகர தி.மு.க. தொழிலாளர் அணி சார்பில் தொழிலாளர் தின விழா முன்னிட்டு சிட்லபாக்கம் ஜி.டி.நாயுடு தெருவில் மாநகர தொழிலாளர் அணி அமைப்பாளர் சிட்லபாக்கம் இரா. விஜயகுமார் தலைமையில் செம்பாக்கம் தெற்கு பகுதிச் செயலாளர் இரா.சுரேஷ் வரவேற்புரையில் மாநகர தொழிலாளர் அணித் தலைவர் செ.ஆரோக்கியராசு, துணைத் தலைவர் இரா.குளஞ்சிநாதன் மற்றும் துணை அமைப்பாளர்கள் எஸ்.ஆர். பாஸ்கர், எஸ்.சண்முகம், எஸ்.மகேஷ், சி.மதியழகன், கே.ஜெகன்நாதன், தே.முருகேசன், ஏ.ஆறுமுகம், மாநகர அமைப்புசாரா ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர்கள் ந.சீனிவாசன், மு.பாரதிதாசன், சேதுராமன், ஆகியோர் முன்னிலையில் தாம்பரம் மாநகரச் செயலாளர், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா தொழிலாளர் அணி செயலாளர் பிடிசி.ஜி. செல்வராஜ், ஆகியோர் தினக்கூலி, வீட்டுவேலை, காலனி தைப்பவர், டைலர், எலக்டிரிசியன், பேப்பர், பால், தண்ணீர் விநியோகிப்பவர்கள், தெரு வியாபாரிகள் போன்ற தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவி தொகை, தொழிலாளர் நலவாரிய உறுப்பினர் சேர்த்தல், தொழிலாளர்களை கெளரவித்து நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். மேலும் கேட்பாரற்று கிடந்த 9 பவுன் நகையை போலீசில் ஒப்படைத்த ஆட்டோ ஓட்டுனர் கோடீஸ்வரனின் நேர்மையை பாராட்டினார்கள்.

இந்நிகழ்வில் தாம்பரம் மாநகர மேயர் க.வசந்தகுமாரி, தாம்பரம் மாநகர துணை மேயர் கோ.காமராஜ், மண்டலக்குழுத் தலைவர் டி.காமராஜ், எஸ்.இந்திரன், மாநகரப் பொருளாளர் வ.விஜயரங்கன், தலைமை கழக பேச்சாளர் கி.வேல்மணி, தலைமை பொதுக்குழு உறுப்பினர் க.தேவேந்திரன், மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் வீ.கார்த்திக், மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் சிட்லபாக்கம் இ.மனோகரன், ரமணி ஆதிமூலம், தி.ச.நடராஜன், மு.தசரதன், மாமன்ற உறுப்பினர்கள், சானிட்டோரியம் சி.சுரேஷ், பி.ஜோதி குமார், சி.ஜெகன், இரா.ராஜா, பகுதி கழக நிர்வாகிகள் க.ராமச்சந்திரன், ச.லட்சுமி பதிராஜா, தேவ.முத்து(எ) முருகன் வ.அன்பழகன், ம.சீனிவாசன், ச.வெங்கடசாமி, வட்டக் கழகச் செயலாளர்கள் ஆர்.சதீஷ்குமார், லோ. தனவந்தன், மு.வினோத், அ.லோகேஷ், டி.திவாகர் மாநகர அணிகளின் துணை அமைப்பாளர்கள் இ.வி.சுரேஷ், பா.பிரதாப், எம்.ஆர்.ராமச்சந்திரன், பகுதி இளைஞரணி அமைப்பாளர், ஜெ.மணி, துணை அமைப்பாளர்கள் கு.தமிழ்செல்வம், பெ.நரேஷ், கே.பி.பி.லட்சுமணன், கழக நிர்வாகிகள் இரா.வினோத்குமார், சி.புஷ்பராஜ், சிவராஜ், கோ. வெங்கடேசன், ஆர்.கே.புரம் சிவா, எம்.கோபி, ஏ.சண்முகம், வி.விசு, ந.வ.சுரேஷ்குமார், திவாகர், ரமேஷ், ஆர்.சுரேஷ், ந.வ.சுரேஷ்குமார், பாலமுருகன், ஆனந்தசங்கர், ஏ.ராஜேஷ், மணிகண்டன், செல்வம், எம்.முனிவேல், க.ஶ்ரீதர், சதீஷ்ராஜன், கணபதி, பாலகுமரன், நவீன், கார்த்திக் மற்றும் கழகத் தோழர்கள், பொதுமக்கள் பங்கேற்றனர்.

மாநகர அமைப்புசாரா ஓட்டுனர் அணி அமைப்பாளர் டி.கே.கோட்டி, நன்றியுரை ஆற்றினார்.





## மே 1 தொழிலாளர் தினத்தை முன்னிட்டு

# கட்டிடத் தொழிலாளர்களுக்கு உபகரணங்கள் புடவை மற்றும் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடை வழங்கும் விழா

தாம்பரம், மே.04-

செங்கல்பட்டு மாவட்டம் தமிழக வெற்றி கழகம் செங்கல்பட்டு வடக்கு மேற்கு தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட 54வது வட்டக் கழக சார்பில் தொழிலாளர்களுக்கு நல திட்ட உதவி வழங்கும் விழா 54வது வட்டம் எஸ் லோகேஷ் மற்றும் நிர்வாகிகள் ஏற்பாட்டில் நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளராக செங்கல்பட்டு வட மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் கில்லி டி.சரத்குமார், மாவட்ட கழக இணை செயலாளர் இ.விஜய் தியாகு ஆகியோர் கலந்து கொண்டு கட்டிடத் தொழிலாளர்களுக்கு பயன்படுத்தும் உபகரணங்கள், மகளிருக்கு புடவை மற்றும் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடை வழங்கினார்கள்

இந்த நிகழ்ச்சியில் தாம்பரம் மேற்கு பகுதி எம்.பிரவீன் குமார், கே.எம்.மணிகண்டன், 54வது வட்டக் கழக நிர்வாகிகள் எம்.எஸ்.விஜய், ஆர்.ஆனந்த், கே.முத்துகிருஷ்ணன், எஸ்.அறிவழகன், எஸ்.தினேஷ், கே.ஶ்ரீதர், விக்னேஷ், முத்துக்குமார், சிவலிங்கம் மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள் ஒன்றிய பகுதி வார்டு மற்றும் மகளிர் அணி கழக நிர்வாகிகள் உட்பட அனைவரும் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்

# தென்காசி மாவட்டத்தில் (13.05.2025) அன்று மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான குறைகேட்பு முகாம்

## மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல்கிஷோர், தகவல்





தென்காசி, மே.04-

தென்காசி மாவட்டத்தில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் மாற்றுத் திறனாளிகளின் குறைகளை தீர்க்கும் பொருட்டு பிரதி மாதம் இரண்டாவது செவ்வாய்கிழமை அனைத்து ஊராட்சி ஒன்றியங்களில் வட்டார அளவிலும், இரு மாதங்களுக்கு ஒரு முறை இரண்டாவது செவ்வாய்கிழமை மாவட்ட அளவில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திட்ட இயக்குநர் முன்னிலையிலும் குறைகேட்பு முகாம்கள் நடத்தப்பட சென்னை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண் : 21591/2022/ MGNREGS-II-2, நாள்:31.05.2022ஆம் தேதிய கடிதத்தின்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், மே 2025 மாதம், இரண்டாவது செவ்வாய்கிழமை அனைத்து ஊராட்சி ஒன்றியங்களில் நடைபெறவிருக்கும் குறைகேட்பு முகாமிலும், மாவட்ட அளவில் மே 2025 மாதம், இரண்டாவது செவ்வாய்கிழமை (13.05.2025) அன்று தென்காசி, மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் வைத்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திட்ட இயக்குநர் முன்னிலையில் நடைபெறவிருக்கும் குறைகேட்பு முகாமிலும் ஊரகப் பகுதியில் வசிக்கும் மாற்றுத் திறனாளிகள் கலந்து கொண்டு பயனடையலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல் கிஷோர், இ. ஆ. ப தெரிவித்துள்ளார்.



# திருச்சியில் தூய்மைப் பணியாளர்களுக்கு தொழிலாளர் தினத்தை முன்னிட்டு பொன்னாடை போற்றி பரிசுகள் வழங்கப்பட்டது

திருச்சி, மே.04-

மக்கள் நல்வாழ்வு சமூக பாதுகாப்பு அமைப்பின் சார்பில் நிறுவன தலைவர் ராஜேஷி ஆலோசனைப்படி மே 1 தொழிலாளர் தினத்தை முன்னிட்டு கடந்த 2/5/2025 வெள்ளிக்கிழமை காலை 10 மணி அளவில் திருச்சி மாவட்டம் துவாக்குடி நகராட்சியில் உள்ள தூய்மை பணியாளர்களுக்கு பொன்னாடை போற்றி பரிசு பொருள்கள் மற்றும் இனிப்புகள் வழங்கி உள்ளோம் இதில் நிறுவன பொதுச்செயலாளர் ஆதிலெட்சுமி ஆனந்தராஜ் மாநில ஆலோசகர் ராமன் துவாக்குடி நகராட்சி ஆணையர் பட்டுசாமி வழக்கறிஞர் சாருமதி மாநில இளைஞரணி துணைத் தலைவர் ஜான் மாநில ஒருங்கிணைப்பாளர் ராமன் மாநில மகளிர் அணி துணைத் தலைவர் ஜெயராணி மாநிலச் மகளிர் அணி செயலாளர் பானுமதி திருச்சி மாவட்ட இளைஞரணி தலைவர் ராஜசேகர் திருச்சி மாவட்டம் திருச்சி மாவட்ட துணைத் தலைவர் ஈஸ்வரி மகளிர் அணி துணைத் தலைவர் காந்திமதி திருச்சி மாவட்ட செயலாளர் திலகவதி திருச்சி மாவட்டம் மகளிர் அணி ஒருங்கிணைப்பாளர் பழனியம்மாள் மல்லீஸ்வரி சரண்யா தமிழ்ச்செல்வன் மற்றும் நகராட்சி சூப்பர்வைசர்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்


**வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் சிவகங்கை**

**B3 /1693 / 2025**

அ.காதரம்மாள்
க/பெ.அப்துல் நசீர் கான்
7/3B, உமாருப் புலவர் தெரு, திருப்புவனம் புதூர்
சிவகங்கை மாவட்டம்

மனுதாரர்

மேற்படி மனுதாரரின் தாய் சி. ஜென்னத் பீவி க/பெ சின்னையாஎன்பவர் மேற்படி முகவரியில் கடந்த 20.05.1990 ம் தேதிஅன்று இறந்தார். மேற்படி மனுதாரர் இறந்த இறப்பு குறித்து பதிவுசெய்ய தவறி விட்டதால் மேற்படி இறப்பை பதிவு செய்யக்கோரி சிவகங்கை கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளார் மேற்படி தேதியில் மனுதாரரின் தாய் சி.ஜென்னத் பீவிஎன்பவருக்கு இறப்புச் சான்று வழங்க எவருக்கேனும் ஆட்சேபனை இருக்கும் பட்சத்தில் சிவகங்கை கோட்டாட்சியரிடம் 20 நாட்களுக்குள் ஆட்சேபனை செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறது இவ்வாறு ஏதேனும் ஆட்சியபனை செய்ய தவறும் பட்சத்தில் மேற்படி மனுதாரரின் தாய்.சி. ஜென்னத் பீவிஎன்பவருக்கு இறப்பு சான்று வழங்கப்படும் என்பதை இதன் மூலமாக தெரிவிக்கப்படுகிறது.

**மனுதாரர்**
**அ.காதரம்மாள்**
**7/3B, உமறுப்புலவர் தெரு**
**திருபுவனம் புதூர்**
**சிவகங்கை மாவட்டம்**


# மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், செய்திக்குறிப்பு

இராமநாதபுரம், மே.04-

இராமநாதபுரம் மாவட்டத்தில் 1434ம் பசலிக்கான வருவாய் தீர்வாயம் கணக்கு முடிப்பு (ஜமாபந்தி) 20.05.2025 முதல் 30.05.2025 வரை (சனி, ஞாயிறு, திங்கள்கிழமை மற்றும் உள்ளூர் விடுமுறை நீங்கலாக) வருவாய் வட்டாட்சியர் அலுவலகங்களில் நடைபெற உள்ளது.

1434ம் பசலி ஆண்டு (2024-2025) கோரிக்கை தொடர்பான மனுக்களை ஜமாபந்தி அலுவலரிடம் நேரடியாகவும், மற்றும் https://cmhelpline.tnega.org/support/iipgcms /showHomepage. do#cases/new என்ற இணையதளம் அல்லது இ.சேவை மையங்கள் மூலமாகவும் 20.05.2025 முதல் 30.05.2025 வரை பதிவேற்றம் செய்;து கொள்ளலாம் எனவும், பதிவேற்றம் செய்யப்படும் மனுக்கள் உரிய முறையில் பரிசீலனை செய்யப்பட்டு மனுதாரர்களுக்கு தீர்வு வழங்கப்படும் என பொதுமக்களுக்கு தெரிவிக்கப்படுகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் இ.ஆ.ப.,செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## 2025 ஆம் கல்வி ஆண்டில் பொறியியல் படிப்புகளில் சேர விரும்பும் கன்னியாகுமரி மாவட்ட மாணவ மாணவியர்களுக்கான மிகச்சிறந்த பொறியியல் கல்லூரிகளின் சிறப்பு அரங்குகள்

### நாகர்கோவில் ஸ்காட் கிறிஸ்தவ கல்லூரி வளாகத்தில் 05.05.2025 அன்று நடைபெறவுள்ளது

கன்னியாகுமரி, மே.04-

கன்னியாகுமரி மாவட்ட பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 12ம் வகுப்பு தேர்வு எழுதி, உயர்கல்வி பயில உள்ள மாணவ மாணவியர்களுக்கான உயர்கல்வி வழிகாட்டி முகாம் வரும் 05.05.2025 மற்றும் 06.05.2025 ஆகிய இரு நாட்கள் நாகர்கோவில் ஸ்காட் கிறிஸ்தவ கல்லூரி வளாகத்தில் வைத்து நடைபெறவுள்ளது.

இம்மாபெரும் கல்வி விழிப்புணர்வு முகாம் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, செய்திக்குறிப்பில் தெரிவிக்கையில் கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தை சார்ந்த சிறந்த கல்லூரிகள் பங்குபெறும் உயர் கல்வி வழிகாட்டி அரங்குகள் 05.05.2025 அன்று பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளை சார்ந்த அரங்குகள் அமைக்கப்பட உள்ளன. இதில் அக்கல்லூரிகளில் சேர்வதற்கான கட்டணம், அக்கல்லூரிகளின் தேர்ச்சி சதவீதம், கல்லூரிகளில் பயின்றவர்கள் பெற்றுள்ள வேலை வாய்ப்புகள் உள்ளிட்ட வைகள் மாணவர்களின் காட்சிக்காக வைக்கப்பட உள்ளன .

மேலும் 06.05.2025 அன்று கலை மற்றும் அறிவியல் சார்ந்த படிப்புகள் மற்றும் பாராமெடிக்கல் சார்ந்த கல்வி நிறுவனங்கள் பங்கேற்க உள்ளன. இவ்வரங்குகளில் சம்பந்தப்பட்ட உயர்கல்வியை படிப்பதன் மூலம் மாணவர்கள் பெற்றுக் கொள்ளும் வேலை வாய்ப்புகள், மாணவர்களுக்கு கிடைக்கப்பெறுகின்ற உதவித்தொகைகள், மாணவர்கள் வங்கி க டன்களை பெற்றுக் கொள்ள தேவையான வழிகாட்டுதல்கள், கல்வி நிறுவனங்களின் சிறப்பம்சங்கள், கல்வி நிறுவனங்களால் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் அளிக்கப்படுகின்ற பயிற்சிகள் உள்ளிட்டவைகள் குறித்த வழிகாட்டுதல்கள் மாணவர்களுக்கு அரங்குகளின் வழியாக அளிக்கப்பட உள்ளன. எனவே 12ஆம் வகுப்பு தேர்வு எழுதி உயர்கல்வி செல்ல விரும்பும் அனைத்து மாணவர்களும் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி சிறந்த உயர் கல்வி பெறுவதற்கான வழிமுறைகளை தெரிந்து கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, தெரிவித்துள்ளார்கள்.



## தென்காசி சங்கரன்கோவிலில் கனமழை; சங்கரநாராயண சுவாமி கோயிலில் மழைவெள்ளம் புகுந்தது

### முழங்கால் அளவு தண்ணீரில் பக்தர்கள் தரிசனம்

சங்கரன்கோவில், மே.04-

சங்கரன்கோவிலில் பெய்த கனமழையால் சங்கரநாராயணசுவாமி கோயிலில் மழைவெள்ளம் புகுந்தது. முழங்கால் அளவுக்கு தேங்கிய தண்ணீரில் பக்தர்கள் தரிசனம் செய்தனர். தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் நேற்று காலை வெயில் கொளுத்தியது. பிற்பகலில் வெயிலின் தாக்கத்தால் பொதுமக்கள் வெளியே வர அச்சப்பட்டனர். இந்நிலையில் மாலை 4 மணிக்கு பிறகு மேக கூட்டங்கள் திரண்டு திடீரென இடியுடன் கனமழை பெய்தது. இதனால் நகரின் பல பகுதிகளில் மழைநீர் தேங்கியது. சாலைகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது.

மேலும் சங்கரநாராயண சுவாமி கோயிலுக்குள் மழைவெள்ளம் புகுந்தது. சங்கரலிங்கசுவாமி சன்னதி, கோமதி அம்பாள் சன்னதி, சண்முகர் சன்னதி ஆகிய பகுதிகளில் முழங்கால் அளவிற்கு தண்ணீர் தேங்கியது. இதனால் பக்தர்கள் கடும் சிரமத்திற்குள்ளாகினர். நேற்று வெள்ளிக்கிழமை என்பதால் வெளியூரில் இருந்து கோயிலுக்கு வந்த பக்தர்கள் மழை நீருக்குள் நின்று சுவாமி தரிசனம் செய்தனர். இதுகுறித்து பக்தர்கள் கூறுகையில், ‘மழை நேரங்களில் எல்லாம் சங்கரநாராயண சுவாமி கோயிலுக்குள் தண்ணீர் புகுவது வாடிக்கையாக உள்ளது. கோயிலுக்குள் மழைநீர் வராத வண்ணம் நிரந்தர தீர்வு காண வேண்டும்’ என்றனர்.



## திருவாரூர் மாவட்டம் குடவாசலில் ரூ.15 கோடி மதிப்பீட்டில் அரசு கல்லூரி கட்டுமான பணி: விரைவாக முடிக்க கலெக்டர் உத்தரவு

திருவாரூர், மே.04-

திருவாரூர் மாவட்டம் குடவாசலில், ரூ.15 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் அரசு கல்லூரி கட்டுமான பணிகளை விரைவாக முடிக்க கலெக்டர் உத்தரவிட்டார்.

திருவாரூர் மாவட்டம் குடவாசல் ஒன்றியத்தில் நேற்று அரசின் வளர்ச்சி திட்ட பணிகளை கலெக்டர் மோகனசந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதன்படி செல்லூர் என்ற இடத்தில் ரூ.15 கோடி மதிப்பில் நடைபெற்று வரும் அரசு கல்லூரிக்கான கட்டிட கட்டுமான பணியினை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தவுடன் பணியினை விரைவாகவும் உரிய தரத்துடனும் செய்து முடிக்குமாறு அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

மேலும் மனப்பறவை என்ற இடத்தில் கலைஞர் கனவு இல்லம் வீடு கட்டுமான பணி மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.6 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டு வரும் ஈம சடங்கு மண்டபம் கட்டுமான பணி மற்றும் மேலப்பாலையூர் என்ற இடத்தில் ஜல்ஜீவன் திட்டத்தின் கீழ் ரூ.30 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டு வரும் 60 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி ஆகியவற்றினை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மேலும் ரூ 4 கோடி 73 லட்சம் மதிப்பில் நடைபெற்று வரும் பிரதம மந்திரி சாலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் காவனூர் முதல் அடவங்குடி வரையிலான சாலை அமைக்கும் பணியினை ஆய்வு செய்தார்.

மேலும் காங்கேய நகரம் என்ற இடத்தில் கலைஞர் கனவு இல்லம் கட்டுமான பணிகள் மற்றும் அங்குள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் ரூ 7 லட்சத்து56 ஆயிரம் மதிப்பில் நடைபெற்று வரும் மதிய உணவு சமையல் கூடம் கட்டுமான பணி உள்ளிட்டவற்றை ஆய்வு செய்த கலெக்டர் மோகனசந்திரன் அனைத்து பணிகளையும் உரிய தரத்துடன் விரைவாக முடிக்க வேண்டும் என சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

## மாணவ, மாணவியர்கள் நுழைவு சீட்டில் குறிப்பிட்டுள்ள நேரத்திற்கு முன்னதாக தேர்வு மையத்திற்கு வருகை தரவேண்டும்

### தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வுக்கான முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி தலைமையில் நடைபெற்றது

சேலம், மே.04-

தேசிய தகுதி மற்றும் நுழைவுத்தேர்வு நாளை 04.05.2025 நடைபெறவுள்ளதையொட்டி சேலம் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள தேர்வுக்கான முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, தலைமையில் சேலம் மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்றது.



தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு (NEET) நாளை 04.05.2025 நடைபெறவுள்ளது. சேலம் மாவட்டத்தில் 9,731 தேர்வர்கள் எழுத உள்ளனர். இதற்கென சேலம் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள 22 தேர்வு மையங்களில் இத்தேர்வு நடைபெறுகிறது. மாணவ, மாணவியர்கள் நுழைவு சீட்டில் குறிப்பிட்டுள்ள நேரத்திற்கு முன்னதாக தேர்வு மையத்திற்கு வருகை தரவேண்டும்.

மேலும் தேர்வுக் கூடங்களைக் கண்காணித்திடவும், தேர்விற்கான அனைத்து ஏற்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டும் மாவட்ட அளவிலான பொறுப்பு அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டு தேர்வுக்கான முன்னேற்பாட்டுப்பணிகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டுள்ளதை உறுதி செய்திட இக்கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது.

தேர்வு மையங்களுக்குத் தேர்வர்கள் செல்வதற்கு ஏதுவாக நாளை 04.05.2025 காலை முதல் தேவைக்கேற்ப சிறப்புப் பேருந்துகள் இயக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், தேர்வு நடைபெறும் நாளில் தேர்வு மையங்கள் மற்றும் வினாத்தாள் கட்டுக்காப்பு மையங்களுக்கு தடையில்லா மின்சாரம் வழங்கிடுவதை உறுதி செய்திட தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தேர்வு மையங்கள் மற்றும் வினாத்தாள் கட்டுக்காப்பு மையங்களுக்கு தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை காவல் துறை மேற்கொள்ளவும், தீயணைப்பு மீட்புப் பணிகள் துறையினர் மூலம் தேவைப்படும் இடங்களில் தீயணைப்பு வாகனங்களை தயார் நிலையில் வைத்திடவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. தேர்வு மையங்களில் அடிப்படை வசதிகளான குடிநீர், மின்சாரம் ஆகியவற்றை உறுதி செய்திட பொறுப்பு அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. தேசிய தேர்வு முகமையின் விதிமுறைகளுக்குட்பட்டு சேலம் மாவட்டத்தில் மாணவ, மாணவியர்கள் சிறப்பாக தேர்வு எழுதிட முன்னேற்பாட்டுப்பணிகள் அனைத்தும் முழுமையாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார், தேர்வுக்கான மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பி.ஜி.கிருஷ்ணன், மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) திருமதி அ.மயில், சேலம் வருவாய் கோட்டாட்சியர் திருமதி அ.அபிநயா, மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் மு.கபீர், வருவாய் துறை, காவல் துறை, மாவட்ட கருவூலத்துறை, தீயணைப்பு - மீட்புப் பணிகள் துறை, தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம், தமிழ்நாடு மின்சார வாரியம் உட்பட தொடர்புடைய துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

மாணவர்களின் கலைத்திறனை வளர்க்கும் விதமாக மாவட்ட அரசு இசைப்பள்ளியில்

## வருகின்ற 05ஆம் தேதி முதல் 24ஆம் தேதி வரை குரலிசை, பரதநாட்டியம், தற்காப்புக்கலை மற்றும் ஓவியம் போன்ற கலைகளில் பயிற்சி அளிக்கப்படவுள்ளது

### மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத் தகவல்

தூத்துக்குடி, மே.04-

ஐந்து முதல் பதினாறு வயதுக்குட்பட்ட பள்ளி மாணாக்கர்களுக்கு கலைப்பயிற்சிகள் வழங்குதல், அவர்களின் கலைத்திறமைகளை வெளிக்கொணருதல், கலைக்கல்வி வழங்குதல் ஆகியவற்றை முக்கிய நோக்கமாகக் கொண்டு தமிழ்நாடு முழுவதும் ஜவகர் சிறுவர் மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. திருநெல்வேலி மண்டலத்தின் கீழ் செயல்படும் தூத்துக்குடி மாவட்ட ஜவகர் சிறுவர் மன்றத்தில் குரலிசை, பரத நாட்டியம், தற்காப்புக்கலை மற்றும் ஓவியம்; போன்ற கலைகளில் 6 வயது முதல் 16 வயது வரை உள்ள மாணாக்கர்களுக்கு வாரந்தோறும் சனி மற்றும் ஞாயிறு கிழமைகளில் மாலை 10.00 மணி முதல் 12.00 மணி வரை பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. தற்போது, தூத்துக்குடி வ.சவேரியார்புரம், தாளமுத்து நகர் காவல் நிலையம் எதிரில் அமைந்துள்ள மாவட்ட அரசு இசைப்பள்ளி வளாகத்தில்; ஜவகர் சிறுவர் மன்றம் செயல்பட்டு வருகின்றது.

எனவே, மாணவர்கள் கோடை விடுமுறையை பயனுள்ளதாக கழிக்கும் வகையில்; மாணவர்களின் கலைத்திறனை வளர்க்கும் விதமாக மாவட்ட அரசு இசைப்பள்ளியில் வருகின்ற 05-05-2025 முதல் 2405 2025 வரை காலை 9.00 மணி முதல் 12.00 மணி வரை குரலிசை, பரதநாட்டியம், தற்காப்புக்கலை மற்றும் ஓவியம் போன்ற கலைகளில் பயிற்சி அளிக்கப்படவுள்ளது. பயிற்சி முடிந்தவுடன் நிறைவு நாள் அன்று பயிற்சி பெற்ற மாணாக்கர்களுக்கு பயிற்சி சான்றிதழ் வழங்கப்படும். இவ்வாய்ப்பினை மாணாக்கர்கள் பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும், விவரங்களுக்கு 9487739296 என்ற கைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத்,தெரிவித்துள்ளார்.



## பாட்டவயல் சோதனைச்சாவடியில் பிளாஸ்டிக் தடுப்பு நடவடிக்கை; வாகன சோதனைகள் தீவிரம்

பந்தலூர், மே.04-

பந்தலூர் அருகே பாட்டவயல் சோதனைச் சாவடியில் பிளாஸ்டிக் தடுப்பு நடவடிக்கையாக கேரளாவில் இருந்து வரும் வாகனங்களை நிறுத்தி பணியாளர்கள் சோதனையில் ஈடுபட்டனர். நீலகிரி மாவட்டம், பந்தலூர் அருகே பாட்டவயல் சோதனைச்சாவடி வழியாக கேரளா மாநிலம் வயநாடு மாவட்டங்களில் இருந்து ஏராளமான வாகனங்கள் சுற்றுலாவுக்காகவும் பிற பணிகளுக்காகவும் வந்து செல்கின்றனர். அவ்வாறு வரும் வாகனங்களில் தடை செய்யப்பட்டுள்ள பிளாஸ்டிக் தண்ணீர் பாட்டில்கள், கேரி பேக்குகள் உள்ளிட்டவைகளை எடுத்து வந்து தமிழக பகுதிகளில் சாலையோரங்களிலும், தேயிலை தோட்டங்கள், நீர் நிலைகள், சுற்றுலா தலங்களில் வீசி எறிவதால் சுற்றுச்சூழல் பாதிப்புகள் ஏற்படுகின்றது.

அதனால் மாவட்ட நிர்வாகம் சார்பில் எல்லைப்பகுதியில் உள்ள சோதனைச்சாவடிகளில் கேரளாவில் இருந்து வரும் வாகனங்களை நிறுத்தி வாகன சோதனை மேற்கொண்டனர். பந்தலூர் அருகே பாட்டவயல் சோதனைச்சாவடியில் கேரளாவில் இருந்து வரும் வாகனங்களை நிறுத்தி பணியில் இருக்கும் ஊழியர்கள் தீவிர சோதனையில் ஈடுபட்டனர்.




## கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை மலர் சந்தை ரூ.2.12 கோடி மதிப்பில் கூடாரம் அமைக்கும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா நேரில் பார்வையிட்டு ஆய்வு

கன்னியாகுமரி, மே.04-

கன்னியாகுமரி மாவட்ட வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பில் தோவாளை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தோவாளை மலர் சந்தையில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் கூடாரத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கன்னியாகுமரி மாவட்டத் திற்குகென பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகளை வழங்கி வருகிறார்கள்.

அதன்ஒருபகுதியாக தமிழ்நாட்டிலேயே மிகவும் பிரசித்திப்பெற்ற தோவாளை மலர் சந்தையினை மேம்படுத்தும் வகையிலும், மலர்கள் விற்பனை செய்பவர்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றும் வகையிலும், பாதுகாப்பு தன்மையுடன் மலர்களை விற்பனை செய்ய தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் கீழ் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதல் பெற்று ரூ.2.12 கோடி மதிப்பில் மேற்கூரை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும் இப்பணியினை இம்மாத இறுதிக்குள் முடித்து, மலர் விற்பனை யாளர்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர துணை இயக்குநர் வேளாண் விற்பனை அலுவலர், செயற்பொறியாளர் மற்றும் துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, தெரிவித்துள்ளார்கள்.

தொடர்ந்து தோவாளை வட்டாரத்துக்குட்பட்ட வீர மார்த்தாண்டபுரம் பகுதியில் வசித்து வரும் திருநங்கைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, நேரில் சந்தித்து, குறைகள் மற்றும் வாழ்வாதாரத்தினை கேட்டறிந்தார்கள். மேலும் தமிழ்நாடு அரசால் திருநங்கைகளுக்காக வழங்கப்படும் அனைத்து நலத்திட்ட உதவிகளையும் உடனுக்குடன் வழங்க வேண்டுமென வட்டாட்சியர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

நடைபெற்ற ஆய்வுகளில் துணை இயக்குநர் கீதா (வேளாண் விற்பனை), தோவாளை வட்டாட்சியர் கோலப்பன், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.




# கோத்தகிரி நேரு பூங்காவில் காய்கறி கண்காட்சியுடன் கோடை விழா துவங்கியது

ஊட்டி, மே.04-

நீலகிரி மாவட்டத்தில் காய்கறி கண்காட்சியுடன் கோடை விழா துவங்கியது. நீலகிரி மாவட்டத்தில் ஆண்டுதோறும் காய்கறி கண்காட்சியுடன் கோடை விழா துவங்கி ஒரு மாதம் நடக்கும். இம்முறை இன்று (3ம் தேதி) கோத்தகிரியில் நேரு பூங்காவில் 13வது காய்கறி கண்காட்சியுடன் கோடை விழா துவங்கியது. காலை 10 மணிக்கு துவங்கிய விழாவில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் பன்னீர்செல்வம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், சுற்றுலா துறை அமைச்சர் ராஜேந்திரன் மற்றும் அரசு தலைமை கொறடா ராமச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு துவக்கி வைத்தனர்.

காய்கறி கண்காட்சியை முன்னிட்டு பல ஆயிரம் டன் காய்கறிகளை கொண்டு பல்வேறு அலங்காரங்கள் நேரு பூங்காவில் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், பூங்கா முழுவதும் பல ஆயிரம் மலர் செடிகளில் பல்வேறு வகையான மலர்கள் பூத்துக்குலுங்குகின்றன. இன்று துவங்கிய காய்கறி கண்காட்சி நாளையும் நடக்கிறது. இதனை நீலகிரி மாவட்டத்திற்கு வரும் சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்து செல்வர். காய்கறி கண்காட்சியை முன்னிட்டு சுற்றுலா பயணிகள் கோத்தகிரி பகுதிக்கு செல்லும் வகையில் ஊட்டி மற்றும் குன்னூர் பகுதிகளில் இருந்து சிறப்பு பஸ்களை இயக்கப்படுகிறது.

நாய் கண்காட்சி

நாய் கண்காட்சி 9ம் தேதி துவங்கி 3 நாட்கள் ஊட்டி அரசு கலைக்கல்லூரியில் நடக்கிறது. 9ம் தேதி கீழ் படிதல் போட்டிகள் நடத்தப்படுகின்றன. இதில், காவல்துறை நாய்கள் உட்பட பல்வேறு பகுதிகளில் இருந்து கொண்டு வரப்படவுள்ள நாய்கள் பங்கேற்க உள்ளன. இதில், பீகில், டேக்சென்ட், ஜெர்மன் செப்பர்டு, லேப் போன்ற வகைகளை சேர்ந்த நாய்கள் போட்டிகளில் பங்கேற்கின்றன. மே 10, 11ம் தேதி நாய்கள் கண்காட்சி நடக்கிறது. இதில், பல வகையான நாய்கள் இடம் பெறுகிறது. போட்டியில் ராஜபாளையம், கேரவன் அவுண்ட், கன்னி, கோம்பை உட்பட பல்வேறு இந்திய வகை நாய்கள் கலந்து கொள்கிறது. மேலும், பல்வேறு மாநிலங்களை சேர்ந்த 400க்கும் மேற்பட்ட நாய்கள் பங்கேற்க வாய்ப்புள்ளது என சவுத் இந்தியன் கேனல் கிளப் தலைவர் ரஜினி கிருஷ்ணமூர்த்தி தெரிவித்தார்.

# அனைத்து தனியார் பள்ளி வாகனங்களை கூட்டாய்வு செய்யும் சிறப்பு முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்

தேனி, மே.04-

தேனி மாவட்டம், ஆயுதப்படை மைதானத்தில் தேனி மாவட்டத்தில் உள்ள அனைத்து தனியார் பள்ளிகளின் வாகனங்களை ஆய்வு செய்யும் சிறப்பு முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், அவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆர்.சிவபிரசாத், இ.கா.ப., முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



தேனி மாவட்ட நிர்வாகம், காவல்துறை, பள்ளிக்கல்வித்துறை, தீயணைப்புத்துறை, வட்டார போக்குவரத்து அலுவலகம் இணைந்து தேனி வட்டார அலுவலகத்திற்குட்பட்ட தனியார் பள்ளிகளில் பயிலும் மாணவர்களை ஏற்றி செல்லும் 380 பள்ளி வாகனங்களை கூட்டாய்வு செய்யும் பணிகள் இன்று நடைபெற்றது.

இவ்வாய்வின்போது, பள்ளி வாகனத்தில் அவசர கால வழி (EmergencyExit Door), முதலுதவிப்பெட்டி, ஏறி இறங்கும் படிகட்டுகள், தீயணைப்பான் கருவி, வாகனத்தின் தரை பலகை (Plot form), கண்காணிப்பு கேமிரா உள்புறம் மற்றும் வெளிப்புறம் ஆகியன முறையாக உள்ளதா என்றும் மேலும், வேக கட்டுப்பட்டுக்கருவி வாகனத்தின் பிரேக்கின் திறன் போன்றவை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் பள்ளி வாகன ஓட்டுநர்களிடம் தெரிவித்ததாவது,

ஆண்டுக்கு ஒருமுறை பள்ளி மாணவ, மாணவிகளை அழைத்து செல்லும் வாகனங்களை கூட்டாய்வு மூலம் ஆய்வு செய்திட வேண்டும் என்று தமிழ்நாடு அரசின் உத்தரவிட்டதன் அடிப்படையில், இன்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பள்ளி வாகன ஓட்டுநர்கள் சீருடை அணிந்திருக்க வேண்டும். பள்ளிவாகனத்தில் ஒரு உதவியாளர் இருக்க வேண்டும். வாகனத்தின் பின்புறம் பள்ளி நிர்வாகத்தின் தொலைப்பேசி எண், வட்டாரப்போக்குவரத்து அலுவலகத்தின் தொலைப்பேசி எண், காவல் நிலைய தொலைப்பேசி எண், குழந்தைகள் பாதுகாப்பு எண் உள்ளிட்டவை நன்றாக தெரியும் வகையில் எழுதப்பட வேண்டும். வாகனத்தில் கண்டுபிடிக்கப்பட்ட குறைபாடுகளை சரிசெய்து மீண்டும ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

ஒரு வாகனத்தின் திறன் எவ்வாறு முழுமையாக உள்ளதோ அதேபோன்று வாகன ஓட்டுநர்களும் முழுமையான உடல் தகுதிகளை பெற்றிருக்க வேண்டும். குறிப்பாக, இரத்த அழுத்தம், சர்க்கரை நோய், கண் பரிசோதனை மேற்கொண்டு, மருத்துவரின் அறிவுரையை பின்பற்றி முறையாக மருந்துகளை எடுத்துக் கொள்ள வேண்டும். முறையாக மருத்துவ பரிசோதனைகளை தொடர்ந்து மேற்கொண்டு, உடலை பேணி பாதுகாத்து கொள்ள வேண்டும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான அரசு முதலமைச்சர் மருத்துவக்காப்பீட்டு திட்டத்தின்கீழ் மருத்துவ காப்பீடு அட்டைகள் வழங்கப்பட்டு வருகிறது. பள்ளி வாகன ஓட்டுநர்களுக்கும் மருத்துவ காப்பீடு அட்டை வழங்குவதற்கு மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாடு அரசு விதித்துள்ள வழிமுறைகளையும், சாலை பாதுகாப்பு விதிகளையும், முறையாக பின்பற்றி வாகனங்களை இயக்க வேண்டும். பள்ளி மாணவர்களை ஏற்றி செல்வதால் வாகனங்கள் இயக்குவதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். இன்று ஆய்வுக்கு வராத வாகனங்களை பள்ளி திறப்பதற்கு முன்பாக, வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் ஆய்வுக்கு உட்படுத்திக்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

மேலும், உத்தமபாளையம் வட்டத்திற்கு ட்பட்ட 287 பள்ளி வாகனங்கள் வருகின்ற 06.05.2025 அன்று கூட்டாய்வு செய்யும் பணிகள் நடைபெற உள்ளது.

இவ்வாய்வில், பெரியகுளம் சார் ஆட்சியர் ரஜத்பீடன், உதவி காவல் கண்காணி ப்பாளர் கேல்கர் சுப்பிரமணிய பாலசந்திரா, இ.கா.ப., வட்டார போக்குவரத்து அலுவலர் பெ.மாணிக்கம், மாவட்ட தீயணைப்பு அலுவலர் இரா.ஜெகதீஸ், மாவட்ட கல்வி அலுவலர் திருமதி வசந்தா, மோட்டார் வாகன ஆய்வாளர்கள், மணிவண்ணன் (தேனி), சுந்தரராமன் (உத்தமபாளையம்) உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# திருப்பத்தூரில் 4 கிலோ ரூ.10க்கு விற்பனை அறுவடையாகும் தக்காளியை கீழே கொட்டும் விவசாயிகள்

திருப்பத்தூர், மே.04-



திருப்பத்தூரில் கடும் விலை வீழ்ச்சியால், அறுவடை செய்யும் தக்காளியை கீழே கொட்டும் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர். திருப்பத்தூர் பகுதிகளில் தற்போது தக்காளி அறுவடைக்கு தயாரான நிலையில் அறுவடை செய்ய கூலி ஆட்கள் மூலம் தக்காளி அறுவடை செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் தக்காளியின் விலை மிகவும் வீழ்ச்சி அடைந்ததால் குறைவான விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது. தக்காளி 4 கிலோ ரூ.10க்கு விற்பனை செய்யப்படுகிறது.

இதனால் தக்காளி பயிரிடப்பட்ட செலவு கூட விவசாயிகளுக்கு கட்டுப்படியாகவில்லை என விவசாயிகள் வேதனை தெரிவிக்கின்றனர். இதுகுறித்து விவசாயிள் கூறுகையில், 'நாங்கள் மூன்று மாத காலம் இந்த தக்காளியை பயிரிட்டு அதற்கு மருந்து உள்ளிட்டவைகளை தெளித்து தற்போது அறுவடைக்கு தயாரான காலத்தில், தக்காளியின் விலை கடும் வீழ்ச்சடைந்துள்ளது.

இதனால் விவசாயிகள் அனைவரும் வேதனை அடைந்துள்ளோம். மேலும் வெயிலின் தாக்கம் அதிகமாக காணப்படுவதால் தக்காளி அழுகிய நிலையில் அதிக அளவு காணப்படுகிறது.

கூலியாட்களுக்கு கூலி கூட கட்டுப்பாடியாகவில்லை. இதனால் தக்காளியை கீழே கொட்டும் சூழல் நிலவுகிறது. எங்களது வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே மாவட்ட நிர்வாகம் ஆய்வு செய்து எங்களுக்கு இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்' என கோரிக்கை வைத்துள்ளனர்.

# ராமானுஜரின் 1008வது அவதார ஜெயந்தி: சேலம் மணிமண்டபத்தில் சிறப்பு பூஜை

சேலம், மே.04-

ராமானுஜரின் 1008வது அவதார ஜெயந்தி உற்சவத்தையொட்டி, சேலத்தில் உள்ள ஸ்ரீராமானுஜர் மணிமண்டபத்தில் இன்று சிறப்பு பூஜைகள் நடத்தப்பட்டது. இதில், பக்தர்கள் ஏராளமானோர் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்தனர்.

ராமானுஜரின் 1008வது திருநட்சத்திர அவதார ஜெயந்தி உற்சவம் இன்று கொண்டாடப்பட்டு வருகிறது. இதையொட்டி, சேலம் எருமாபாளையத்தில் உள்ள ஸ்ரீ ராமானுஜர் மணிமண்டபத்தில் நேற்று சிறப்பு பூஜைகள் நடத்தப்பட்டன. இதனை யொட்டி, மணிமண்டப வளாகத்தில் காலை 7 மணிக்கு சுப்ரபாதம், கோ பூஜை, விஸ்வரூப சேவை, திருவாராதனம் ஆகியவை தொடங்கி நடைபெற்றன.

பின்னர், 18 அடி உயரம் கொண்ட ஸ்ரீ ராமானுஜரின் பிரம்மாண்டமான திருவுருவச்சிலையின் முன்பாக, ஸ்ரீ ராமானுஜர் உற்ஸவ மூர்த்திக்கு 108 கலச ஸ்தபன விஷேச திருமஞ்சனம் செய்யப்பட்டு, சிறப்பு அலங்காரமும் செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து ராமானுஜ நூற்றந்தாதி பாராயணமும் நடந்தது. இந்த சிறப்பு பூஜைகளில் பக்தர்கள் ஏராளமானோர் பங்கேற்று, சுவாமியை தரிசனம் செய்து வழிபட்டனர். பின்னர், பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது. விழா ஏற்பாடுகள் சேலம் ஸ்ரீ பகவத் ராமானுஜ கைங்கர்ய சொசைட்டி நிர்வாகம் சார்பில் செய்யப் பட்டன.



# கள்ளக்குறிச்சியில் கண்காணிப்பு குழு கூட்டம் குழந்தை திருமணத்தில் சம்பந்தப்பட்ட அனைவர் மீதும் நடவடிக்கை: அலுவலர்களுக்கு ஆட்சியர் உத்தரவு

கள்ளக்குறிச்சி, மே.04-

கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் சமூக நலத் துறையின் சார்பில் பெண் குழந்தைகளை காப்போம் பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த சேவை மையம் சேவைகள் தொடர்பான மாவட்ட அளவிலான கண்காணிப்பு குழு கூட்டம் மாவட்ட ஆட்சியர் பிரசாந்த் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளிலும் உள்ள பள்ளி இடைநின்ற பெண் குழந்தைகளை கண்டறிந்து கல்வியில் ஆர்வத்தையும் பள்ளியில் மீண்டும் சேர்ந்து பயிலும் ஊக்கத்தையும் உருவாக்கிடவும், பெண் குழந்தைகளை ஆய்வு பயணங்களுக்கு அழைத்து செல்லவும், இத்திட்டத்தில் சமூக நலத்துறையுடன் பள்ளி கல்வி துறையும் இணைந்து செயல்பட மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தினார்.

மேலும் குழந்தை திருமணம், இளம் வயதில் கர்ப்ப நிகழ்வுகள் ஏற்படாமல் தடுக்கவும், தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் வட்ட அளவில் கண்காணிப்புக்குழுக்கள் அமைத்திடவும், இது குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும் சமூகநலத்துறை, காவல்துறை, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம் உள்ளிட்ட சம்ம ந்தப்பட்ட துறைகளுக்கு மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தினார்.

தொடர்ந்து இதுவரை குழந்தை திருமணம் குறித்து பதிவு செய்யப்பட்டுள்ள வழக்குகள் குறித்தும், பெண் குழந்தைகள் பள்ளி இடைநிற்றலை தடுக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக கலந்தாலோசிக்கப்பட்டது. மேலும் குழந்தை திருமண நடவடிக்கையில் ஈடுபடும் அனைவர் மீதும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள சம்பந் தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தினார். இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ஜீவா, மாவட்ட சமூக நல அலுவலர் தீபிகா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# லாட்ஜ், தங்கும் விடுதிக்கு எச்சரிக்கை விழுப்புரத்தில் 12ம் தேதி மிஸ் கூவாகம் அழகி போட்டி: நாடு முழுவதுமிருந்து குவியும் திருநங்கைகள் -பாதுகாப்பு ஏற்பாடு குறித்து கலெக்டர் ஆலோசனை

விழுப்புரம், மே.04-

விழுப்புரத்தில் வரும் 12ம் தேதி திருநங்கைகளுக்கான மிஸ்கூவாகம் அழகிப் போட்டி நடைபெறுகிறது. இதற்கான பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து ஆட்சியர் துறை அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார். அப்போது லாட்ஜ், தங்கும் விடுதிகளில் கூடுதல் கட்டணம் வசூலித்தால் உரிய நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார். விழுப்புரம் ஆட்சியர் அலுவலகத்தில் கூவாகம் கூத்தாண்டவர் திருக்கோயில் சித்திரை திருவிழாவினை முன்னிட்டு, மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடுகள் மற்றும் பாதுகாப்பு பணிகள் குறித்து துறை சார்ந்த அலுவலர்களுடனான ஆலோசனைக்கூட்டம் கலெக்டர் ஷேக்அப்துல் ரஹ்மான் தலைமையில் நடைபெற்றது.



இக்கூட்டத்தில் அவர் பேசியதாவது: கள்ளக்குறிச்சி மாவட்டம் கூவாகம் கூத்தாண்டவர் திருக்கோயில் சித்திரை திருவிழா நிகழ்ச்சிகள் 11.5.2025 முதல் நடைபெறவுள்ளது. இதில் முக்கிய நிகழ்வாக 13.5.2025 அன்று இரவு சுவாமி திருக்கண் திறத்தல் மற்றும் அன்றைய தினம் திருநங்கைகள் திருமாங்கல்யம் ஏற்றுக்கொள்ளுதல் நிகழ்ச்சி நடைபெறும். இந்நிகழ்விற்கு பல்வேறு நாடுகள், மாநிலங்கள் மற்றும் மாவட்டங்களிலிருந்து வரும் ஆயிரக்கணக்கான திருநங்கைகள் கலந்துகொள்வார்கள்.

அந்த வகையில், விழுப்புரம் மாவட்டத்தில், 11.5.2025 அன்று புதிய பேருந்து நிலையம், விழுப்புரம் நகராட்சி திடலில் திருநங்கைகளுக்கான மிஸ் திருநங்கை அழகிப்போட்டியும், 12.5.2025 அன்று விழுப்புரம், ஆஞ்சநேயர் திருமண மண்டபத்தில் முதல் சுற்றாக காலை 10 மணி முதல் மாலை 2 மணி வரை மிஸ் கூவாகம் அழகிப்போட்டியும், விழுப்புரம் நகராட்சி திடலில், இறுதிச்சுற்றாக மாலை 6 மணி முதல் 9 மணி வரை மிஸ் கூவாகம் அழகிப்போட்டியும் நடைபெறவுள்ளது.

மேலும், கள்ளக்குறிச்சி அருகாமை மாவட்டம் என்பதால் திருநங்கைகள் பெருமளவில் விழுப்புரத்தில் தங்கி திருவிழா நிகழ்ச்சிக்கு செல்வது வழக்கமான ஒன்றாக உள்ளது. எனவே, இதுதொடர்பாக பாதுகாப்பு பணிகள் மற்றும் முன்னேற்பாடு பணிகள் குறித்து துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது. நிகழ்ச்சி நடைபெறும் நாளன்று காவல் துறை சார்பில் பாதுகாப்பு பணிகள், போக்குவரத்து சீர் செய்யும் பணிகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

மேலும், நகராட்சி நிர்வாகம் சார்பில் நிகழ்ச்சி நடைபெறும் இடத்தில் சுகாதாரமான குடிநீர் வசதி, கழிவறை வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் ஏற்படுத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், சுகாதாரத்துறை சார்பில், தேவையான மருத்துவ முகாம் மற்றும் விழுப்புரம் மாவட்ட தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு அலகு சார்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் மேற்கொள்ள ப்படவுள்ளது.

இதுமட்டுமல்லாமல், விழுப்புரம் மாவட்டத்தில், தனியார் தங்கும் விடுதிகள், ஓட்டல்களில் திருநங்கைகள் தங்குவதற்கு கூடுதல் கட்டணம் வசூலிக்கக்கூடாது. கூடுதல் கட்டணம் வசூலித்தால் கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அவர் கூறினார். இக்கூட்டத்தில், சமூகபாதுகாப்பு திட்ட தனித்துணை ஆட்சியர் முகுந்தன், கலால் உதவி ஆணையர் ராஜீ, மாவட்ட வழங்கல் அலுவலர் சந்திரசேகர், மாவட்ட சுகாதார அலுவலர் செந்தில்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# கோயம்பேடு - பட்டாபிராம் வரை ரூ.9,928 கோடியில் மெட்ரே ரயில் நீட்டிப்புக்கு தமிழக அரசு ஒப்புதல்

ரூ.9,928 கோடியில் கோயம்பேடு முதல் பட்டாபிராம் வரையிலான மெட்ரோ ரயில் நீட்டிப்பு திட்டத்திற்கு தமிழக அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. சென்னையின் வளர்ச்சி மற்றும் முக்கிய பகுதிகளை இணைக்கும் வகையில், 2ம் கட்ட மெட்ரோ ரயில் திட்டம் 3 வழித்தடங்களில் 116 கிலோ மீட்டர் தூரத்திற்கு ரூ.63,246 கோடி மதிப்பில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போது, கோயம்பேடு முதல் பட்டாபிராம் வரை 21.7 கிலோ மீட்டருக்கு ரூ.9,928 கோடியில் மெட்ரோ வழித்தடம் அமைக்கப்பட உள்ளது. இதற்கான திட்ட அறிக்கைக்கு தமிழக அரசு ஒப்புதல் அளித்துள்ளது. கோயம்பேடு முதல் பட்டாபிராம் வரையிலான வழித்தடத்துக்கு மெட்ரோ ரயில் நிர்வாகம் தயாரித்த திட்ட அறிக்கையின்படி, இதற்கான ஒப்புதலை தமிழக அரசு வழங்கி உள்ளது. இந்த மெட்ரோ ரயில் வழித்தடம் தொடர்பான ஆய்வறிக்கையை மூத்த ஐஏஎஸ் அதிகாரி கே.கோபால் சில தினங்களுக்கு முன் தமிழக அரசிடம் சமர்பித்திருந்தார். இதனடிப்படையில், வடசென்னை மக்களிடம் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்த இந்த மெட்ரோ திட்டத்திற்கு நேற்று தமிழக அரசு அனுமதி வழங்கி உத்தரவிட்டுள்ளது. சுமார் 21.76 கி.மீ நீளம் கொண்ட இந்த வழித்தடத்தில், 19 ரயில் நிலையங்கள் அமைக்கப்பட உள்ளன. கோயம்பேடு முதல் பட்டாபிராம் வெளிவட்ட சாலை வரை இந்த மெட்ரோ வழித்தடம் அமையவுள்ளது. இந்த திட்டத்திற்கு ரூ.9,744 கோடி செலவாகும் எனவும் மதிப்பீடுப்பட்டுள்ளது. இதில் புதிதாக 3 மேம்பாலங்கள் அமைக்கப்பட உள்ளது. இந்த திட்டத்தின்படி, கோயம்பேட்டிலிருந்து தொடங்கும் மெட்ரோ ரயில் வழித்தடம் பாடி புதுநகர், முகப்பேர், அம்பத்தூர், திருமுல்லைவாயல், ஆவடி வழியாக சென்று பட்டாபிராம் வெளிவட்டச் சாலையில் முடிவடைகிறது. இந்த திட்டம் அம்பத்தூர் தொழிற்பேட்டை, அம்பத்தூர் ஓ.டி., ஆவடி ரயில் நிலையம், பேருந்து முனையம், வெளிவட்டச் சாலை ஆகியவற்றுக்கு தடையின்றி போக்குவரத்து வழங்கும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது என மெட்ரோ நிர்வாகம் தெரிவித்துள்ளது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161